DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 117/2024 |
| Deposition of witness | : | P W- 4 |
| Name | : | தேன்மொழி |
| Father's /Husband Name | : | தங்கமுத்து |
| Village | : | பெரம்பலூர் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 34 |
| Occupation | : | உதவி மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day March, 2026.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டம் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிகிறேன். இதற்கு முன்னர் நன்னிலம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். கடந்த 17.5.2024-ம் தேதி மாலை 4.15 மணிக்கு நான் மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது நன்னிலம் முடிகொண்டான் மேலத்தெருவைச் சேர்ந்த 93 வயதுடைய முத்துக்கண்ணு மகன் நடராஜன் என்பவர் என்னிடம் அவரது மனைவியால் வாயில் காயத்துடன் சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் தன்னை தெரிந்த 1 நபரால் 17.5.2024 ம் தேதி மதியம் 2.30 மணி அளவில் அவரது வீட்டு அருகே வைத்து அருவாளால் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது கீழ்கண்ட காயங்கள் காண்ப்பட்டன.

1. அவரது இடது கன்னத்தின் உள்பக்க தாடைக்கு அருகில்ருந்து ரத்தக்கசிவு காணப்பட்டது.

2. மேலும் அவரது இடது பக்க கன்னத்தின் அருகில் இருந்து ரத்தக்குழாய் துண்டாகி காணப்பட்டு அதிலிருந்து ரத்தகசிவு காணப்பட்டது.

மேற்படி நபருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து அவரை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லுரி மருத்துமனைக்கு மேல் சிசிச்சைக்காக பரிந்துரை செய்தேன். மேற்படி நபருக்கு நான் பதிவு செய்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.2** குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் கூறியதுபோல் அருவாளால் தாக்கப்பட்டிருந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

3 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளளார் என்றால் சரிதான் ஆனால் ஒருவர் மட்டுமே அருவாளால் தாக்கியதாக கூறியுள்ளார். ஒரு நபர் ஆட்டை பிடித்து தூக்கி செல்லும் போது அதன் கொப்பு வாயில் குத்தினால் மேற்படி நடராஜனுக்கு இருந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.